திருச்சிராப்பள்ளி ஸ்ரீ ஐயப்ப சங்கம்.
வாரம் ஒரு நீதிக்கதை – 15.02.2026

# ஒரு சொல் வெல்லும்.. ஒரு சொல் கொல்லும்..!

அன்று ஆசிரியர் தினம். அந்தப் பள்ளியில் ஏழாம் வகுப்பில் படிக்கும் மாணவர்கள் தங்களின் வகுப்பு ஆசிரியை சுமதிக்கு, ஆசிரியர் தின வாழ்த்துகளைச் சொல்லி, தங்களிடமிருந்த பரிசுப் பொருட்களைக் கொடுத்து வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டிருந்தனர்.

அதே வகுப்பில் இருந்த ஒரு மாணவன் மட்டும் தன்னால் எந்தப் பரிசும் டீச்சருக்குத் தர முடியவில்லையே.. என்று வருத்தத்துடன் எதையோ யோசித்துக் கொண்டு அமர்ந்திருந்தான். காரணம்.. தந்தையை இழந்து, வீட்டுவேலை செய்து கஷ்டப்பட்டு உழைக்கும் தாயுடன் வாழும் மிகவும் ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவன் அந்த மாணவன்.

மதிய உணவு இடைவேளையின் போது அந்த மாணவன் டீச்சரின் அருகில் வந்து, தன் கையில் வைத்திருந்த ஒரு புதிய கைக்கடிகாரத்தை அவருக்குப் பரிசாகக் கொடுத்து, ஆசிரியர் தின வாழ்த்துகளைத் தெரிவித்தான்.
“உங்களை… எனக்கு மிகவும் பிடிக்கும் மிஸ். உங்களுக்காக இதை நான் வாங்கி வந்தேன். இந்தக் கைக்கடிகாரத்தை நீங்கள் கட்டிக் கொள்ள வேண்டும் ” என்று சொன்னான்.

டீச்சர் “ நாளை இந்தக் கடிகாரத்தைக் கட்டி வருகிறேன் ” என்று சொல்லி அந்தப் பரிசைப் பெற்றுக் கொண்டார்.

உணவு இடைவேளை முடிந்தது. வகுப்பு தொடங்கிய சிறிது நேரத்தில் அந்தப் பள்ளி வளாகத்திற்கு அருகில் கடை வைத்திருக்கும் ஒரு நபர் வகுப்பறைக்குள் நுழைந்தார். டீச்சரின் அனுமதி பெற்று, அந்த வகுப்பில் இருந்த ஒரு மாணவனின் பெயரைச் சொல்லி, “ இவன் எங்கள் கடையிலிருந்து ஒரு கைக்கடிகாரத்தை திருடிக் கொண்டு வந்து விட்டான் ” என்று புகார் தெரிவிக்கிறார்.

டீச்சர், “ இல்லையே.. அந்தக் கைக்கடிகாரம் மாணவன் எனக்காக வாங்கி வந்தது ” என்று சொல்ல..

வந்தவர் சொன்னார், “ சற்று நேரத்திற்கு முன்பு கடைக்கு வந்த இந்த மாணவன் ஒரு கைக்கடிகாரத்தின் விலையை கேட்டான். நான் விலையைச் சொல்லிவிட்டு, வேறொரு பொருளை எடுத்துக் கொண்டு திரும்பி வரும்போது, கடிகாரத்தையும் காணவில்லை இந்தப் பையனையும் காணவில்லை. இந்த வகுப்பில்தான் அவன் படிக்கிறான் என்பது எனக்கு தெரியும். அதனால்தான் வந்தேன் ” என்று சொன்னார்.

அந்த மாணவன் கண்களில் கண்ணீர் கசிய எழுந்து நின்றான்.

டீச்சர் சற்றும் யோசிக்காமல் அந்தக் கைக்கடிகாரத்தின் விலை எவ்வளவு என்று கேட்டு, அதன் தொகையை வந்தவரிடம் கொடுத்து அனுப்பி விடுகிறார்.

கடைக்காரர் சென்ற பிறகு அந்த மாணவனைத் தனியே அழைத்து, “ஏன் இவ்வாறு செய்தாய்?” என்று கேட்டார் டீச்சர்.

மாணவன் அழுது கொண்டே.. " எல்லோரும் உங்களுக்கு ஆசிரியர் தின வாழ்த்துகள் தெரிவித்து பரிசுப் பொருள் கொடுத்தார்கள். என்னால் எதுவும் தர முடியவில்லை. என்னிடம் பணமும் இல்லை. நான் மிகவும் கஷ்டப்படுபவன். அதனால்தான் இப்படிச் செய்துவிட்டேன் " என்று சொல்ல,
டீச்சர் அந்த மாணவனைத் தனியே அழைத்து, " தம்பி.. பரிசு பெரியதாக இருக்க வேண்டியதில்லை. நேர்மை இல்லாத பரிசு. என் இதயத்தை வலிக்கச் செய்கிறது. ஆனால் நீ நல்லவன்.
இந்த ஒரு தவறினால்.. உன் வாழ்க்கைத் தவறாகி விடக்கூடாது. இனி ஒருபோதும் இவ்வாறு செய்யாதே. இனிமேல் உண்மையைத் துணையாகக் கொண்டு நடந்து காட்டு. நீ கண்டிப்பாக உயர்வாய்." என்று அவன் மனம் புண்படாவண்ணம் ஆறுதலாகப் பேசி அனுப்பி வைத்தார்.
அந்த வார்த்தைகள் மாணவனின் இதயத்தில் ஆழமாகப் பதிந்தன.

காலங்கள் உருண்டோடின. சில வருடங்கள் கழித்து.. அந்த ஊரின் ஒரு மிகப்பெரிய அலுவலகத்தில் உயர்ந்த பதவியில் இருக்கும் ஒரு அதிகாரி அந்த பள்ளிக்கு வந்து, அந்த ஏழாம் வகுப்பு ஆசிரியை பெயரைச் சொல்லி விசாரித்து அனுமதி வாங்கி, அந்த டீச்சர் இருக்கும் இடத்திற்குச் சென்றார்.

ஆசிரியைக்கு வந்தவர் யார்? என்று தெரியவில்லை.

மீண்டும் அந்த பழைய நினைவுகளை அந்த மாணவன் நினைவு படுத்த ஆசிரியைக்கு நினைவு வருகிறது.

ஒரு விலை உயர்ந்த ஒரு கைக்கடிகாரத்தை ஆசிரியைக்குப் பரிசாக கொடுக்கிறார் அந்த நபர்.

"இப்பொழுது ஏன் எனக்கு இவ்வளவு விலை உயர்ந்த கடிகாரத்தைப் பரிசாகத் தருகிறாய்? "என்று ஆசிரியர் கேட்க

அன்று மட்டும் நீங்கள் எல்லோர் முன்னிலையிலும் என்னைத் திருடன் என்று சொல்லி இருந்தால் நான் மிகவும் உடைந்து போய் இருப்பேன்.
நீங்கள் சொல்லாத அந்த சொல்லும்...
நீங்கள் சொன்ன அன்பான ஆறுதல் சொற்களும்... என் மனதில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. என்றாவது ஒரு நாள் விலை உயர்ந்த ஒரு கைக்கடிகாரத்தை என்னுடைய வருமானத்தில் உங்களுக்கு வாங்கித் தர வேண்டும் என்று ஆசைப்பட்டேன். அதைச் செய்வதற்காகவே இங்கு வந்தேன்" என்று சொல்லி ஆசிரியரின் கால்களில் விழுந்து வணங்கினான் அந்த மாணவன்.

மாணவர்களின் உலகத்தில் ஆசிரியர்கள் மட்டுமே அனைத்தும் அறிந்தவர்கள். அவர்களின் வாயிலிருந்து வரும் வார்த்தைகள் மாணவர்களின் வாழ்வில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும். அன்று ஆசிரியை சொல்லாத சொல்லும்... சொன்ன நற்சொல்லும் அந்த மாணவனை வெல்ல வைத்தது.

ஒரு கடுமையான சொல் ஒரு மனிதனை உடைக்கலாம்..
ஒரு அன்பான வார்த்தை அவன் வாழ்க்கையை மாற்றலாம்.